1986 மே 2]

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரவிமங்கலம் கிராமத்திலுள்ள இரவிமங்கலம் கண்மாயைச் செப்பனிட, சிறப்பு சிறுபாசனத் திட்டத்தின் கீழ், ஆய்வுகள் செய்யப்பட்டு, மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டன. எனினும், நான் முன்பே சொன்னது போல், ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ், அந்தத் திட்டத்தை மேற்கொள்ள அரசு முனைந்தாலும், அந்தத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு இல்லாத காரணத்தால், அந்தத் திட்டத்தை நாம் மேற்கொள்ள இயலவில்லை. அவ்வாறு மேற்கொள்ள இயலா விட்டாலும் வேறு பல்வேறு திட்டங்களின் கீழ் அந்தத் திட்டத்தை நடைமுறை செய்ய இயலுமா என்ற சாத்தியக் கூறுகளை இந்த அரசு பரிசீலித்து வருகிறது. ஏதாவது, வாய்ப்பு ஏற்படுமானால், அந்தத் திட்டத்தை மேற்கொள்வதில் இந்த அரசு மகிழ்ச்சி அடையும்.

## சித்தப்பட்டிணம் கால்வாய் திட்டம்.

645—(* வினா எண். 5055)—திரு. மு. சந்திரசேகர்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென் ஆற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம் முகையூர் தொகுதியில் உள்ள சித்தப்பட்டிணம் ஏரியில் நீரை தேக்கி—புதிய கால்வாய்களை அமைத்து சொரையப்பட்டு—நெடுகம்பட்டு மற்றும் 10 கிராம ஏரிகளுக்கு நீர் கொண்டு செல்லும் சித்தப்பட்டிணம் கால்வாய் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** இத்திட்டம் தல அதிகாரிகளின் விரிவான ஆய்வில் உள்ளது.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சித்தப்பட்டிணம் ஏரியானது, சாத்தனூர் அணையில் நீர் பிடிக்கும் ஏரியாக உள்ளது. ஆகவே, தென் பெண்ணையாற்றிலே, வீணாகப் பாய்கின்ற நீரைத் தேக்கி வைத்து, வறண்ட பகுதியாக இருக்கிற சொரையப்பட்டு—

நெடுகம்பட்டு போன்ற கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க முன்னுரிமை எடுத்துக் கொண்டு, இந்தத் திட்டத்தை கூடிய விரைவிலே நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்:** பேரவைத் தலைவர் அவர்களே, 14 ஏரிகளுக்குத் தண்ணீரை வழங்குகின்ற இந்தத் திட்டத்தைத் தல அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டுமென்ற உத்தரவினை இந்த அரசு போட்டது. அந்த உத்தரவின் அடிப்படையிலே, மேலெழுந்தவாரியாக ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு, சுமார் ரூ. 53.58 இலட்சம் செலவில், அந்தத் திட்டத்தை மேற்கொள்ள முடியும் என்ற கருத்தினை இந்த அரசுக்குத் தல அதிகாரிகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான், அதனால் எவ்வளவு தூரத்திற்கு நிலங்கள் பயனடையும் என்பதையெல்லாம் பார்த்து, அந்தப் பயனுக்கு ஆகும் செலவு விகிதம், பயன் பெறும் பரப்பு போன்றவைகளை ஆய்வு செய்த பிறகுதான், மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க முடியும். அந்தப் பணிதான் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

## திருமுட்டம் பகுதியை ஒன்றியமாக்கல்

குறுகிய கால வினா எண் 8—(* வினா எண். 9124) திரு. சா. ஜெயச்சந்திரன், கே. ஆர். கணபதி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தென் ஆற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோவில் ஊராட்சி ஒன்றியம், கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம் இரண்டையும் உள்ளடக்கிய திருமுட்டம் பகுதியை தனியாக பிரித்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (அ) மற்றும் (ஆ) திருமுட்டம் பகுதிக்கெனத் தனியான ஊராட்சி ஒன்றியத்தை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.